மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லும்போது விவாதத்தில் பேசுவதுபோல் பேசக்கூடாது.*

இருளில் கிடந்த தமிழகத்தை மீட்டெடுக்க அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மின் உற்பத்தியைப் பெருக்க துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் மிகக் குறைந்த செலவில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடுதல் மின் உற்பத்தியைச் செய்திட Super Critical *தொழில்நுட்பத்துடன்கூடிய எண்ணூர் அனல் மின் விரிவாக்கத் திட்டம், திரவ இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி மின் உற்பத்தி, உடன்குடி விரிவாக்க அனல் மின் திட்டம் போன்ற திட்டங்களை அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு அவை உறுப்பினர்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வருங்காலத்தில் தமிழ்நாடு, மின் உற்பத்தியில் மிகை மாநிலமாக, மற்ற மாநிலங்களுக்கு மின்சாரம் வழங்கும் மாநிலமாகத் திகழும் என்பதில் மாறுபட்ட கருத்து நிச்சயமாக இருக்க முடியாது. அவை உறுப்பினர்கள் அனைவரின் சார்பில் அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

4. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, நீங்கள் காலையில்தான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதைத் துறைக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் வரட்டும். தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் காலையில்தான் கொடுத்தீர்கள். (குறுக்கீடுகள்) காலையில்தான் என்னுடைய அறைக்கு வந்து கொடுத்தீர்கள். துறைக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன்.*

5. முன்பண மானியக் கோரிக்கைகள், 2012—2013, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012-2013 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

2012 மார்ச் 29]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டு உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கின்றேன்.

2012—2013 ஆம் ஆண்டு உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	15,78,85	-	40,00
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	11,39,41	-	-
3	நீதி நிருவாகம்	246,78,72	-	-
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	460,59,79	54,08,72	1
5	வேளாண்மைத் துறை	1,430,38,49	31,48,06	60,12,00
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	285,61,33	40,00,04	1
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	1,07,76,20	59,12,74	-
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	29,70,22	-	4,05,81
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	241,18,87	16,23,10	1

10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	114,18,10	-	1
11	முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	69,73,37	-	-
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	181,59,81	95,26,04	7,17,54
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	1,998,09,14	16,28,02	1
14	எரிசக்தித் துறை	785,38,22	600,00,00	2
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	2,86,69	80,00,00	6,05,04
16	நிதித் துறை	228,77,02	400,00,00	25,60,10
17	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	226,83,78	1	61,99,22
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	55,46,74	-	-
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	2,165,50,12	61,84,90	6,00
20	உயர் கல்வித் துறை	962,48,57	10,70,54	1

21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	637,13,23	1,623,54,06	1
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1,421,66,34	74,00,00	8,00,01
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	75,64,58	3,38,05	-
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	63,30,43	1	-
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	62,94,08	31,90,80	-
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	237,39,64	354,83,43	68,00,02
27	தொழில் துறை	463,37,84	3,96,88	200,00,02
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	19,11,68	-	-
29	சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)	41,54,12	12,77,07	1
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	30,68,78	44,03	-
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	10,07,48	1	1

32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	245,10,04	5,99,44	1
33	சட்டத் துறை	7,06,18	-	1
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	2,279,52,98	1,406,42,47	83,95,16
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	22,16,69	1	1
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	35,00,08	40,14,70	1
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	30,11,58	-	-
38	பொதுத் துறை	100,49,76	10,00,01	16,00,00
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	84,93,12	325,30,44	9,00
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	600,67,70	848,81,61	-
41	வருவாய்த் துறை	2,125,60,94	80,43,88	1
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	3,242,24,68	1,437,26,94	6,00
43	பள்ளிக் கல்வித் துறை	5,700,41,73	120,68,92	2,16
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	95,76,88	1	1
45	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	1,476,98,80	1	1

46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	12,27,38	-	1
47	இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	32,93,94	1	-
48	போக்குவரத்துத் துறை	165,16,85	60,00,02	60,06,00
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	41,39,36	1	1
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	5,502,18,89	-	-
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	175,67,34	-	-
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	82,44,71	-	1
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	800,70,92	600,00,00	1
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	112,05,51	82,67,40	-
	பெருமொத்தம்	**35,653,97,70**	**8,587,62,39**	**601,64,30**

6. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2011–2012, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011- 2012 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*